# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்ட அறிக்கை ஓகஸ்ட் 2022.08.18

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டின் ஓகஸ்ட் மாதத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டம் கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் 2022.08.18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09.36 மணிக்கு தலைமையலுவலக சபா மண்டபத்தில் ஒரு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமானது. அவ்வேளை கீழ்க்காணும் அங்கத்தவர்கள் சமூகமாகியிருந்தனர்.

1. கௌரவ உறுப்பினர் சசிகலாதேவி ரவி
2. கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி
3. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன்
4. கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா
5. கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி
6. கௌரவ உறுப்பினர் சுப்பையா பத்மநாதன்
7. கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ்
8. கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம்
9. கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா
10. கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை
11. கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா
12. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம்
13. கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன்
14. கௌரவ உறுப்பினர் சுபத்திரா ஜெயசீலன்
15. கௌரவ உறுப்பினர் அனுஷாவதி இதயதாஸ்
16. கௌரவ உறுப்பினர் சந்திரகுமார் ரஜனிதேவி
17. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா
18. கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மயூரன்
19. கௌரவ உறுப்பினர் பொன்னம்பலம் ஆதவன்
20. கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன்
21. கௌரவ உறுப்பினர் சரவணமுத்து தனபாலசிங்கம்
22. கௌரவ உறுப்பினர் கந்தையா ஜினதாஸ்
23. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
24. கௌரவ உபதவிசாளர் பொன்னம்பலம் இராசேந்திரம்
25. கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா
26. கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ்

- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமை உரையிலே இன்றைய 52 வது கூட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், சபையின் செயலாளர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரையும் வரவேற்று தனது காலை வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்.

- ❖ கௌரவ உறுப்பினர்களான சண்முகலிங்கம் சஜீவன், தாயுமானவர் நிகேதன் ஆகியோர் காலை 09.40 மணிக்கு வருகை தந்தனர்.

- ❖ தொடர்ந்து கௌரவ உறுப்பினர் மரியதாசன் ஜோசெப் இதயராஜ் அவர்கள் சுகயீனம் காரணமாக கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியாதுள்ளதாக அறியத் தந்துள்ளார்கள் எனக் கூறி அவரது விடுமுறையினை அனுமதிப்பதற்கு கௌரவ தவிசாளர் சபைக்குச் சமர்ப்பித்தார்.

- ❖ கௌரவ உறுப்பினர் மரியதாசன் ஜோசெப் இதயராஜ் அவர்களின் விடுமுறையினை அனுமதிக்கலாமென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமையுரையிலே மீள்குடியேற்ற செயற்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் விரைவில் எமது தலைமை அலுவலகம், காங்கேசன்துறை உப அலுவலகம், காங்கேசன்துறை பொதுநூலகம் ஆகியன விடுவிக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தொடர்ந்து LDSP திட்டத்தில் காங்கேசன்துறை பொதுச்சந்தைக்கான கட்டிடம் அமைக்கப்பட்டு தற்போது சந்தையின் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது. இதற்காக உழைத்த கௌரவ உறுப்பினர்கள்,

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். வரவு செலவுத்திட்டத்தில் குறிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை தடையின்றி நிறைவேற்ற வழங்கிய ஒத்துழைப்பை இனிவரும் காலங்களிலும் வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

- கௌரவ உறுப்பினர் சுபாஸ்கரன் சந்திரமதி அவர்கள் காலை 09.42 மணிக்கு வருகை தந்தார்.

  - தொடர்ந்து நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் 21.07.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கையை அங்கீகரிக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களினால் கோரப்பட்டது.

- யூலை மாதம் 21.07.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் பொன்னத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

    - கௌரவ உறுப்பினர்களான சசிகலாதேவி ரவி, பொன்னம்பலம் ஆதவன் ஆகியோர் கௌரவ தவிசாளரின் அனுமதியினைப் பெற்று காலை 09.45 மணிக்கு சபையிலிருந்து வெளியேறினர்.

➢ அடுத்து 17.08.2022 ஆகிய திகதி நடைபெற்ற நிதிக்குழுக் கூட்டத்தின் சிபாரிசிற்கமைய கொடுப்பனவுகள் விபரம் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | R.K Electricals, KKS Rd, Mallakam | 15W LED Bulb கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 165,000.00 |
| 02 | Alpha Industries Pvt Limited, KKS Rd, Jaffna | Library Cupboard கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 499,800.00 |
| 03 | Sairam Trade Centre, Thellippalai | மயிலிட்டி உப அலுவலகத்திற்கு வர்ணம்பூசும் பொருட்கள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 187,400.00 |
| 04 | R.K Electricals, KKS Rd, Mallakam | Tube Light Set கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 292,500.00 |
| 05 | NFlash Super Detergent, Kondavil East | சுத்திகரிப்புப் பொருட்கள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 121,685.00 |
| 06 | R.K Electricals, KKS Rd, Mallakam | Sensor 6A கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 157,000.00 |
| 07 | மாவை கிளானை வளர்மதி சனசமூக நிலையம், | சபைநிதி மூலம் (2021) மேற்கொள்ளப்பட்ட Renovation of Chanal Side Bath Area and Catchment Sum at Keerimalai Kerny in Keerimalai – Phase VI வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,999,676.66 |
| 08 | KP Engineering, Araly West, Vaddukoddai | சபைநிதி 2020 (அபிவிருத்தி ஒதுக்கம்) மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Myliddy Sub Office Building at Myliddy Stage I வேலைக்கான பிடிபணம் | Rs 368,950.00 |
| 09 | SD Engineers All Construction, Araly South, Vaddukoddai | சபைநிதி 2020 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Nunasai Veethy at Alaveddy வேலைக்கான பிடிபணம் | Rs 295,000.00 |
| 10 | KP Engineering, Araly West, Vaddukoddai | சபைநிதி 2019 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Priyapulam Road வேலைக்கான பிடிபணம் | Rs 240,250.00 |

**தீர்மான இல: 01/18.08.2022**

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | R.K Electricals, KKS Rd, Mallakam | 15W LED Bulb கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 165,000.00 |
| 02 | Alpha Industries Pvt Limited, KKS Rd, Jaffna | Library Cupboard கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 499,800.00 |
| 03 | Sairam Trade Centre, Thellippalai | மயிலிட்டி உப அலுவலகத்திற்கு வர்ணம்பூசும் பொருட்கள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 187,400.00 |
| 04 | R.K Electricals, KKS Rd, Mallakam | Tube Light Set கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 292,500.00 |
| 05 | NFlash Super Detergent, Kondavil East | சுத்திகரிப்புப் பொருட்கள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 121,685.00 |
| 06 | R.K Electricals, | Sensor 6A கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 157,000.00 |

| | | | |
|---|---|---|---|
| | KKS Rd, Mallakam | | |
| 07 | மாவை கிளானை வளர்மதி சனசமூக நிலையம், | சபைநிதி மூலம் (2021) மேற்கொள்ளப்பட்ட Renovation of Chanal Side Bath Area and Catchment Sum at Keerimalai Kerny in Keerimalai – Phase VI வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,999,676.66 |
| 08 | KP Engineering, Araly West, Vaddukoddai | சபைநிதி 2020 (அபிவிருத்தி ஒதுக்கம்) மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Myliddy Sub Office Building at Myliddy Stage I வேலைக்கான பிடிபணம் | Rs 368,950.00 |
| 09 | SD Engineers All Construction, Araly South, Vaddukoddai | சபைநிதி 2020 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Nunasai Veethy at Alaveddy வேலைக்கான பிடிபணம் | Rs 295,000.00 |
| 10 | KP Engineering, Araly West, Vaddukoddai | சபைநிதி 2019 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Priyapulam Road வேலைக்கான பிடிபணம் | Rs 240,250.00 |

மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ❖ கௌரவ உறுப்பினர் சொக்கலிங்கம் சபேசன் அவர்கள் காலை 09.53 மணிக்கு வருகை தந்தார்.

- ➢ காங்கேசன்துறை உப அலுவலகத்திற்குட்பட்ட பிரதேச ஆதனங்களின் ஆதனவரியை மீள்மதிப்பீட்டிற்கு அமைய 01.10.2022 ஆம் திகதி முதல் 10% ஆக அறவிடுவதற்கு கௌரவ ஆளுநரின் அனுமதியைப் பெற்று அறவீட்டினை மேற்கொள்வதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 02/18.08.2022**
காங்கேசன்துறை உப அலுவலகத்திற்குட்பட்ட பிரதேச ஆதனங்களின் ஆதனவரியை மீள்மதிப்பீட்டிற்கு அமைய 01.10.2022 ஆம் திகதி முதல் 10% ஆக அறவிடுவதற்கு கௌரவ ஆளுநரின் அனுமதியைப் பெற்று அறவீட்டினை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ❖ கௌரவ உறுப்பினர் கெங்காசுதன் பிரதீபன் அவர்கள் காலை 09.56 மணிக்கு வருகை தந்தார்.

- ➢ மல்லாகம் உப அலுவலக ஆதனவரி அறவீட்டினை கணனி மயப்படுத்துவதற்கு ஐந்து கணனிகள் கொள்வனவு செய்வதற்கான சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 03/18.08.2022**
மல்லாகம் உப அலுவலக ஆதனவரி அறவீட்டினை கணனி மயப்படுத்துவதற்கு ஐந்து கணனிகள் கொள்வனவு செய்வதற்கான அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ❖ கௌரவ உறுப்பினர் சேனாதிராசா கலையமுதன் அவர்கள் காலை 09.57 மணிக்கு வருகை தந்தார்.

- ➢ எமது சபையின் நெய்தல் முன்பள்ளிக்கான கொடி, முன்பள்ளிக்கீதம் என்பவற்றினை உருவாக்குவதற்கான சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 04/18.08.2022**
எமது சபையின் நெய்தல் முன்பள்ளிக்கான கொடி, முன்பள்ளிக்கீதம் என்பவற்றினை உருவாக்குவதற்கான அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ❖ கௌரவ உறுப்பினர் இராமன் சேனாதிராசா அவர்கள் காலை 09.59 மணிக்கு வருகை தந்தார்.

- எமது சபையின் மல்லாகம் கும்பலை சந்தை இறைச்சிக்கடை அமைத்தல் வேலைத்திட்டம் கட்டம் I மூலம் 2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு வேலை பூரணப்படுத்தப்படாமல் காணப்படுகிறது. இதற்கான மிகுதி நிறைவுபடுத்தல் வேலைத்திட்டத்திற்கு ரூபா 1,934,837.14 இற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தினை சபை நிதி 2022 மூலம் மேற்கொள்வதற்கும் குறித்த வேலைத்திட்டத்தினை சனசமூக நிலைய உத்தியோகத்தரின் சிபாரிசுக்கு அமைய கலைவாணி சனசமூக நிலையத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கான சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 05/18.08.2022**
எமது சபையின் மல்லாகம் கும்பலை சந்தை இறைச்சிக்கடை அமைத்தல் வேலைத்திட்டம் கட்டம் I மூலம் 2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு வேலை பூரணப்படுத்தப்படாமல் காணப்படுகிறது. இதற்கான மிகுதி நிறைவுபடுத்தல் வேலைத்திட்டத்திற்கு ரூபா 1,934,837.14 இற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தினை சபை நிதி 2022 மூலம் மேற்கொள்வதற்கும் குறித்த வேலைத்திட்டத்தினை சனசமூக நிலைய உத்தியோகத்தரின் சிபாரிசுக்கு அமைய கலைவாணி சனசமூக நிலையத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கான அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தையா ஜினதாஸ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

  - கௌரவ உறுப்பினர் சிவபாலசுந்தரம் ஹரிகரன் அவர்கள் காலை 10.01 மணிக்கு வருகை தந்தார்.

- உள்ளூராட்சி வாரம், தேசிய வாசிப்பு மாதம் என்பவற்றினை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு நூலகத்திற்கும் தலா ரூபா 30,000.00 இனை வழங்கவும் (ரூபா 30,000.00 x 4), உள்ளூராட்சி வாரத்திற்கு ரூபா 100,000.00 ஒதுக்கீட்டிற்கு கௌரவ ஆளுநரின் அனுமதியினைப் பெற்று மேற்கொள்ளவும் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 06/18.08.2022**
உள்ளூராட்சி வாரம், தேசிய வாசிப்பு மாதம் என்பவற்றினை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு நூலகத்திற்கும் தலா ரூபா 30,000.00 இனை வழங்கவும் (ரூபா 30,000.00 x 4), உள்ளூராட்சி வாரத்திற்கு ரூபா 100,000.00 ஒதுக்கீட்டிற்கு கௌரவ ஆளுநரின் அனுமதியினைப் பெற்று மேற்கொள்ளவும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- வெற்றுதார் பரல்கள், பழைய ரயர்கள், பழைய பத்திரிகைகள் போன்ற பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பொருட்களினை ஏலவிற்பனை செய்வதற்கும் ஏலவிற்பனை சபைக்கு பின்வரும் உத்தியோகத்தர்களையும் சபையின் உறுப்பினர் ஒருவரையும் உள்ளடக்கி ஏலவிற்பனை சபையினை நியமிக்கவும் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.
  திரு.ந.நவாஸ்சங்கர் – பொறுப்பதிகாரி, தெல்லிப்பழை உப அலுவலகம்
  திரு.வை.ரஜினந்தா – வருமானப்பரிசோதகர்
  சபை உறுப்பினர் -

**தீர்மான இல :- 07/18.08.2022**
வெற்றுதார் பரல்கள், பழைய ரயர்கள், பழைய பத்திரிகைகள் போன்ற பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பொருட்களினை ஏலவிற்பனை செய்வதற்கும் ஏலவிற்பனை சபைக்கு பின்வரும் உத்தியோகத்தர்களையும், சபையின் உறுப்பினரையும் உள்ளடக்கி ஏலவிற்பனை சபையினை நியமிக்கவும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
  திரு.ந.நவாஸ்சங்கர் – பொறுப்பதிகாரி, தெல்லிப்பழை உப அலுவலகம்
  திரு.வை.ரஜினந்தா – வருமானப்பரிசோதகர்
  கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம்

- கிழக்கு பல்கலைக்கழகத்தில் கலைமானி பட்டப்படிப்பினை தொடர்கின்ற செல்வி.ச.துவாரகா, திரு.த.யதுர்ஷன் ஆகியோர் எமது சபையில் பயிற்சி பெறுவதற்கு கோரிக்கை கடிதங்களை சமர்ப்பித்துள்ளனர். அவர்களை 08.08.2022 ஆந் திகதியிலிருந்து 08.09.2022 ஆந் திகதி வரையான ஒரு மாத காலப்பகுதிக்கு எமது சபையில் பயிற்சியாளர்களாக இணைத்துக் கொண்டமைக்கான சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 08/18.08.2022**
கிழக்கு பல்கலைக்கழகத்தில் கலைமானி பட்டப்படிப்பினை தொடர்கின்ற செல்வி.ச.துவாரகா, திரு.த.யதுர்ஷன் ஆகியோர் எமது சபையில் பயிற்சி பெறுவதற்கு கோரிக்கை கடிதங்களை சமர்ப்பித்துள்ளனர். அவர்களை 08.08.2022 ஆந் திகதியிலிருந்து 08.09.2022 ஆந் திகதி வரையான ஒரு மாத காலப்பகுதிக்கு எமது சபையில் பயிற்சியாளர்களாக இணைத்துக் கொண்டமைக்கான அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ❖ கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன் அவர்கள் காலை 10.14 மணிக்கு வருகை தந்தார்.

- ➢ எமது சபையின் உப அலுவலக பாவனைக்கு Library Cupboard – 7 கொள்வனவு செய்தமைக்கான சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 09/18.08.2022**
எமது சபையின் உப அலுவலக பாவனைக்கு Library Cupboard – 7 கொள்வனவு செய்தமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ➢ எமது சபையின் மயிலிட்டி உப அலுவலக பாவனைக்காக Tube Light Set - 45 என்பன கொள்வனவு செய்தமைக்கான சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 10/18.08.2022**
எமது சபையின் மயிலிட்டி உப அலுவலக பாவனைக்காக Tube Light Set - 45 என்பன கொள்வனவு செய்தமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ➢ எமது சபையின் வீதிகளுக்கு பொருத்துவதற்காக 15W LED Bulb – 200, Sensor – 200 என்பன கொள்வனவு செய்தமைக்கான சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 11/18.08.2022**
எமது சபையின் வீதிகளுக்கு பொருத்துவதற்காக 15W LED Bulb – 200, Sensor – 200 என்பன கொள்வனவு செய்தமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ➢ சபை நிதி – 2022 மூலம் மேற்கொள்ளப்படவுள்ள, தலைமை அலுவலக நிலக்கல் பதித்தல் (கட்டம் I ) வேலையினை நேரடியாக மூலப்பொருட்களை கொள்வனவு செய்து எமது சபை ஊழியர்களைக் கொண்டு மேற்கொள்வதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 12/18.08.2022**
சபை நிதி – 2022 மூலம் மேற்கொள்ளப்படவுள்ள, தலைமை அலுவலக நிலக்கல் பதித்தல் (கட்டம் I ) வேலையினை நேரடியாக மூலப்பொருட்களை கொள்வனவு செய்து எமது சபை ஊழியர்களைக் கொண்டு மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ➢ சபை நிதி – 2022 மூலம் மேற்கொள்ளப்படவுள்ள, மயிலிட்டி உப அலுவலக எல்லைச்சுவர் அமைத்தல் வேலையினை, நேரடியாக மூலப்பொருட்களை கொள்வனவு செய்து எமது சபை ஊழியர்களைக் கொண்டு மேற்கொள்வதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 13/18.08.2022**
சபை நிதி – 2022 மூலம் மேற்கொள்ளப்படவுள்ள, மயிலிட்டி உப அலுவலக எல்லைச்சுவர் அமைத்தல் வேலையினை, நேரடியாக மூலப்பொருட்களை கொள்வனவு செய்து எமது சபை ஊழியர்களைக் கொண்டு மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர்

தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- எமது சபையின் பாவனையில் உள்ள NP PF 7745 இலக்க வாகனத்தினை திருத்தம் செய்வதற்காக United Motor Lanka PLC நிறுவனத்தினால் ரூபா 182,369.60 இற்கான மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டு இயந்திரப் பொறியியலாளரினால் குறித்த திருத்தம் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதற்கு அமைவாக மேற்படி திருத்தத்தினை மேற்கொள்வதற்கான சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 14/18.08.2022**

எமது சபையின் பாவனையில் உள்ள NP PF 7745 இலக்க வாகனத்தினை திருத்தம் செய்வதற்காக United Motor Lanka PLC நிறுவனத்தினால் ரூபா 182,369.60 இற்கான மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டு இயந்திரப் பொறியியலாளரினால் குறித்த திருத்தம் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதற்கு அமைவாக மேற்படி திருத்தத்தினை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- தீர்மான இலக்கம் 02/21.07.2022 இன் படி எமது சபையின் காங்கேசன்துறை சந்தையின் இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பன 15.08.2022 – 31.12.2022 வரை குத்தகை / வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் 26.07.2022ம் திகதி விளம்பரப்படுத்தியதற்கமைவாக கிடைக்கப்பெற்ற கேள்வி விண்ணப்பப்பத்திரங்கள் 04.08.2022ம் திகதி பி.ப 02.30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்பட்டது. கேள்விச்சபையானது குறித்த விண்ணப்பங்களை பரிசீலித்ததன் பிரகாரம் பின்வரும் கடைகளை ஆகக்கூடிய கேள்வி சமர்ப்பித்த பின்வருவோருக்கு பின்வரும் தொகையில் வழங்கத் தீர்மானித்ததற்கு அமைய சபையின் தழுவு அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | குத்தகைவிபரம் | தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் | கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 01 | காங்கேசன்துறை மாட்டிறைச்சிக் கடை | திரு கந்தன் சிவலிங்கம் | 25,100.00 |
| 02 | காங்கேசன்துறை கருவாட்டுக்கடை இல 01 | திரு.அமிர்தலிங்கம் ரகுநாதன் | 22,500.00 |
| 03 | காங்கேசன்துறை கருவாட்டுக்கடை இல 02 | திரு.அன்ரனி தர்மேந்திரன் | 20,000.00 |

**தீர்மான இல :- 15/18.08.2022**

தீர்மான இலக்கம் 02/21.07.2022 இன் படி எமது சபையின் காங்கேசன்துறை சந்தையின் இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பன 15.08.2022 – 31.12.2022 வரை குத்தகை / வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் 26.07.2022ம் திகதி விளம்பரப்படுத்தியதற்கமைவாக கிடைக்கப்பெற்ற கேள்வி விண்ணப்பப்பத்திரங்கள் 04.08.2022ம் திகதி பி.ப 02.30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்பட்டது. கேள்விச்சபையானது குறித்த விண்ணப்பங்களை பரிசீலித்ததன் பிரகாரம் பின்வரும் கடைகளை ஆகக்கூடிய கேள்வி சமர்ப்பித்த பின்வருவோருக்கு பின்வரும் தொகையில் வழங்கத் தீர்மானித்ததற்கு அமைய தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இல | குத்தகைவிபரம் | தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் | கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 01 | காங்கேசன்துறை மாட்டிறைச்சிக் கடை | திரு கந்தன் சிவலிங்கம் | 25,100.00 |
| 02 | காங்கேசன்துறை கருவாட்டுக்கடை இல 01 | திரு.அமிர்தலிங்கம் ரகுநாதன் | 22,500.00 |
| 03 | காங்கேசன்துறை கருவாட்டுக்கடை இல 02 | திரு.அன்ரனி தர்மேந்திரன் | 20,000.00 |

- 2022 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் முதியோருக்கான நலநோன்பு வசதிகள், வறுமை ஒழிப்பு பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி, வாழ்விடங்களை மேம்படுத்தல் (மலசலகூடம் அமைத்தல்) என்பவற்றிற்கு முறையே ரூபா 200,000.00, 300,000.00, 600,000.00 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே குறித்த உதவி திட்டங்களை வழங்குவதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 16/18.08.2022**

2022 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் முதியோருக்கான நலநோன்பு வசதிகள், வறுமை ஒழிப்பு பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி, வாழ்விடங்களை மேம்படுத்தல் (மலசலகூடம் அமைத்தல்) என்பவற்றிற்கு முறையே ரூபா 200,000.00, 300,000.00, 600,000.00 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே குறித்த உதவி திட்டங்களை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள்

முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- CDLG திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் ரூபா 600,000.00 இனை உள்ளூர் உற்பத்தியினை பொருட்டு ஊக்குவிக்கும் மக்களுக்கு விதைகள், விவசாய உபகரணங்கள் வழங்குவதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 17/18.08.2022**
CDLG திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் ரூபா 600,000.00 இனை உள்ளூர் உற்பத்தியினை ஊக்குவிக்கும் பொருட்டு மக்களுக்கு விதைகள், விவசாய உபகரணங்கள் வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- எமது சபையின் நடைமுறைக்கணக்கிலக்கம் 7573141 இல் உள்ள நிதியிலிருந்து 2022 ஆம் ஆண்டிற்கான சபையினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் ரூபா 10 மில்லியன் நிதியினை ரூபா 5 மில்லியன், ரூபா 5 மில்லியன் தொகைகளாக 3 மாத கால நிலையான வைப்பில் இடுவதற்கும் குறித்த வேலைத்திட்டங்கள் நிறைவு பெற்றதும் நிலையான வைப்பினை மீளப் பெற்று கொடுப்பனவுகளினை மேற்கொள்வதற்கும் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 18/18.08.2022**
எமது சபையின் நடைமுறைக்கணக்கிலக்கம் 7573141 இல் உள்ள நிதியிலிருந்து 2022 ஆம் ஆண்டிற்கான சபையினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் ரூபா 10 மில்லியன் நிதியினை ரூபா 5 மில்லியன், ரூபா 5 மில்லியன் தொகைகளாக 3 மாத கால நிலையான வைப்பில் இடுவதற்கும் குறித்த வேலைத்திட்டங்கள் நிறைவு பெற்றதும் நிலையான வைப்பினை மீளப் பெற்று கொடுப்பனவுகளினை மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அமைச்சின் சுற்றிக்கைப் பிரகாரம் வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கென அமைக்கப்பட்ட திட்டமிடல் குழுவில் பங்குபற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவினை 2022.09.01 ஆம் திகதி தொடக்கம் ரூபா 750.00 இல் இருந்து ரூபா 1,500.00 ஆக அதிகரித்து வழங்குவதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 19/18.08.2022**
பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அமைச்சின் சுற்றிக்கைப் பிரகாரம் வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கென அமைக்கப்பட்ட திட்டமிடல் குழுவில் பங்குபற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவினை 2022.09.01 ஆம் திகதி தொடக்கம் ரூபா 750.00 இல் இருந்து ரூபா 1,500.00 ஆக அதிகரித்து வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- சீராவளையில் உள்ள சேதனப் பசளை தயாரிப்பு நிலையத்தில் காவலாளி அறையும், களஞ்சிய அறையும் அமைக்கும் வேலைத்திட்டத்திற்கு ரூபா 476,985.20 இற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தினை சபை நிதி 2022 மூலம் மேற்கொள்வதற்கும் குறித்த வேலைத்திட்டத்தினை சனசமூக நிலைய உத்தியோகத்தரின் சிபாரிசுக்கு அமைய ஒப்பந்தம் மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கும் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 20/18.08.2022**
சீராவளையில் உள்ள சேதனப் பசளை தயாரிப்பு நிலையத்தில் காவலாளி அறையும், களஞ்சிய அறையும் அமைக்கும் வேலைத்திட்டத்திற்கு ரூபா 476,985.20 இற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தினை சபை நிதி 2022 மூலம் மேற்கொள்வதற்கும் குறித்த வேலைத்திட்டத்தினை சனசமூக நிலைய உத்தியோகத்தரின் சிபாரிசுக்கு அமைய ஒப்பந்தம் மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- தீர்மான இல: 08/17.02.2022 இன் பிரகாரம், பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் (LDSP) Performance Tranche இன் கீழ் Construction of Building for Water and Sanitary Facilities at Compost Yard வேலைத்திட்டத்திற்கு ரூபா 2.72 Mn இற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்தினை கேள்வி கோரி நடைமுறைப்படுத்துவதற்கும் ஒதுக்கீடு ரூபா 1.83 Mn இற்கு மேலதிகமான நிதியினை சபை நிதியிலிருந்து ஈடுசெய்து மேற்கொள்வதற்கும் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 21/18.08.2022**

தீர்மான இல: 08/17.02.2022 இன் பிரகாரம், பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் (LDSP) Performance Tranche இன் கீழ் Construction of Building for Water and Sanitary Facilities at Compost Yard வேலைத்திட்டத்திற்கு ரூபா 2.72 Mn இற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்தினை கேள்வி கோரி நடைமுறைப்படுத்துவதற்கும் ஒதுக்கீடு ரூபா 1.83 Mn இற்கு மேலதிகமான நிதியினை சபை நிதியிலிருந்து ஈடுசெய்து மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்வரும் விடயம் தகவலுக்காக சபைக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

எமது சபையில் நூலகராக கடமையாற்றி வருகின்ற திருமதி.இ.விஜயலட்சுமி அவர்கள் 05.09.2022 ஆம் திகதியும் சுகாதாரத் தொழிலாளியாக கடமையாற்றி வருகின்ற திரு.பூ.காசி அவர்கள் 01.11.2022 ஆம் திகதியும் ஓய்வு பெறவுள்ளனர்.

  - அடுத்து 2022 ஆம் ஆண்டுக்கான யூலை மாதத்திற்கான கணக்கறிக்கை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு யூலை மாதத்திற்கான கணக்கறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- அடுத்து 21.07.2022 ஆம் திகதி நடைபெற்ற வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.
  - தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள வீட்டுத்தோட்டம் அமைப்பது தொடர்பாக கடந்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.
- கௌரவ தவிசாளர் அவர்கள் வீடமைப்பு மட்டுமன்றி சமூக அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும். தற்போதைய இளைய தலைமுறையினரை வழிப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும் எனத் தெரிவித்தார்.

- அடுத்து ஏனைய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.
  - கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் காங்கேசன்துறையில் புதிதாக சந்தை அமைக்கப்பட்டு தற்போது செயற்பட்டு வருகின்றது. இதற்காக உழைத்த கௌரவ தவிசாளர், உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்ததுடன் கடந்த காலங்களில் கொவிட் தொற்று நோய் காரணமாக சுற்றுலாப்பயணிகளின் வருகை குறைவடைந்து காணப்பட்டது. தற்போது சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்து வருகின்றது. எனவே காங்கேசன்துறை சிறுவர் பூங்காவினை புனரமைத்து அதற்கான பாதை தொடர்பாகவும் நடவடிக்கை மேற்கொள்வதுடன் பூங்காவிற்கான நுழைவுச்சீட்டு வடிவமைத்து வழங்கி அதன் மூலமாக வருமானத்தையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார்.
  - கௌரவ தவிசாளர் அவர்கள் கம்பரெலியா வேலைத்திட்டத்தில் ரூபா 3Mn ஒதுக்கப்பட்டு குறித்த பூங்கா திருத்தப்பட்டபோதும் கடந்த காலங்களில் கொவிட் தொற்று நோய் காரணமாக சுற்றுலாப்பயணிகளின் வருகை குறைவடைந்து பூங்கா பாவனையின்றி இருந்தமையால் பழுதடைந்து காணப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

  இவ்விடயம் பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 22/18.08.2022**

காங்கேசன்துறை சிறுவர் பூங்காவை புனரமைப்பதுடன் பூங்காவிற்கு பொதுமக்கள் செல்வதற்கான பாதையை ஒழுங்கமைத்து பொதுமக்கள் பாவனைக்கு வழங்குவதுடன் பூங்காவிற்கான நுழைவுச்சீட்டுக்களை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் சரவணமுத்து தனபாலசிங்கம் அவர்கள் வீதிகளின் புனரமைப்பு பணிகளை தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக பொருட்களின் விலை அதிகரிப்பதால் மேற்கொள்ள முடியாதுள்ளதாக ஒப்பந்ததாரர்கள் அறிவித்துள்ளமையால் வீதிகளை புனரமைக்க முடியாதுள்ளது. இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் வேலைத்திட்டங்களுக்கான பொருட்களின் விலைகள் மீளமைக்கப்பட்டு வழங்கப்படும் என அறியத் தரப்பட்டுள்ளது. அதன் பின்னர் வீதி புனரமைப்புகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் J/246, J/248, J/251 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் விடுவிக்கப்படாத காணிகள் விடுவிக்கப்பட சாத்தியம் உள்ளதா என வினாவினார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் முயற்சி நடைபெற்று வருகிறது எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் உயர் பாதுகாப்பு வலயத்தில் இராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலய வீதி துப்பரவு செய்யப்பட்டுள்ளது. அதற்காக கௌரவ தவிசாளர், சபையின் செயலாளர், ஊழியர்களுக்கு நன்றி எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் எமது சபையில் கழிவகற்றல் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஏனைய உள்ளூராட்சி மன்றங்களில் எரிபொருள் பிரச்சினை காரணமாக கழிவகற்றல் பணிகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. எனவே இதற்காக கௌரவ தவிசாளர், சபையின் செயலாளர், ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இத்துடன் கூட்டமானது காலை 10.20 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

ஒப்பம்: இ.பகீரதன்
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

ஒப்பம்: சோ.சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

உண்மைப்பிரதியென உறுதிப்படுத்துகின்றேன்.

திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை.